ஆதிதிராவிடர் நல ஆணையரின் நேர்முக உதவியாளரின் (பொறுப்பு) செயல்முறைகள், சென்னை–5.

முன்னிலை: திருR.கலைமோகன். B.E.,

ந.க.எண். இ6/16139/2011

நாள்.02.12.2021.

பொருள்: பணியாளர் தொகுதி– கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருத்தலையூர் – அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் திரு.ம.இரகுநாத் என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல்–தொடர்பாக.

பார்வை: அரசாணை (ப) எண்.156 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந7) துறை, நாள். 27.10.2021.

*****

ஆணை:

ஆதிதிராவிடர் நலத்துறையில் கருணைஅடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருத்தலையூர், அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ம.இரகுநாத் என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 06.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தகுதியுள்ள ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதேனும் இருப்பின் அவைகளை விதிகளின்படி பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

R. [signature] 02/12/2021.

ஆதிதிராவிடர் நல ஆணையரின் நேர்முக உதவியாளர்(பொ). 3/6

2/12/21

பெறுநர்.

திரு.ம.இரகுநாத்,
இளநிலை உதவியாளர்,
அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி,
திருத்தலையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(தலைமையாசிரியர் மூலம் தனியருக்கு சார்வு செய்யும் பொருட்டு).

நகல்.

1. அரசு முதன்மைச் செயலர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை–9.
2. தலைமை ஆசிரியர்,
   அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி,
   திருத்தலையூர்,
   திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
3. "இ5" இருக்கைக்கு.
4. முக்கிய ஆவணத் தொகுப்பு.

<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.ம.இரகுநாத் என்பவரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந7)துறை</u>

அரசாணை(ப) எண்.156 | நாள் . 27.10.2021,
பிலவ வருடம்,
ஐப்பசி மாதம் 10 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2052

27 NOV 2021

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. ஆதிதிராவிட நல ஆணையரின் கடித ந.க.எண்.இ6/16139/2011, நாள்.27.08.2021.

******

<u>ஆணை:-</u>

மேலே இரண்டில் படிக்கப்பட்ட, ஆதி திராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டம், மல்ல சமுத்திரம், அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் சமையலராகப் பணிபுரிந்து வந்தபோது 23.11.2002 அன்று காலமான திரு.மணி என்பவரது மகன் திரு.ம.இரகுநாத் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு 06.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணைப் பிறப்பிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்காணும் ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, திருச்சி மாவட்டம், திருத்தலையூர் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், திரு.ம.இரகுநாத் என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 06.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து

அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திரு.ம.இரகுநாத் இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அ.சா.கு எண்.17416/ட்டி1/2021, நாள்.11.10.2021 மற்றும் அ.சா.கு.எண். 32562/ஜி1/2021, நாள்.01.10.2021-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், ஆதி திராவிடர் நலம், சென்னை-5.
திரு.ம.இரகுநாத், இளநிலை உதவியாளர்,
திருத்தலையூர், அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி
(ஆதி திராவிடர் நல ஆணையர் வழியாக)
மாவட்டக் கருவூல அலுவலர், திருச்சி மாவட்டம்
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை - 18 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-8
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
27/10/2021

ந.க.எண். இ6/16139/2011, நாள். 02.12.2021
திருத்தி சார்பு செய்யும் பொருட்டு.

02.12.2021

ஆதிதிராவிடர் நல ஆணையரின்
நேர்முக உதவியாளர்
சேப்பாக்கம், சென்னை–600 005

[அரசாணை(ப) எண்.153, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந7)துறை, நாள் . 25.10.2021]

பெறுநர்.
திரு. ம. இரகுநாத்,
இளநிலை உதவியாளர்,
அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி,
திருத்தலையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.